சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.24/2019

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாமகேஷ்வரி | வயது | 40 |
| க/பெ | சண்முகம் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரேகவுண்டன்புதூர், | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | இல்லத்தரசி |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

அ.வ.எண்.307/2006 வழக்கின் படி எனது கணவருக்கு புல எண்கள்.295/5 மற்றும் 307/2C ஆகிய நிலங்கள் கிடைத்தது என்றால் சரி தான். 3 ம் பிரதிவாதிக்கு புல எண்கள் 291/5, 294/4, 294/6, 294/9, 295/10, 295/11 ஆகியவை கிடைத்தன என்றால் சரி தான். புல எண்.295/5 க்கு தொட்டு அடுத்த மேல் புறம் தான் புல எண்கள் 301/4 மற்றும் 305/3 உள்ளன என்றால் சரி தான். அந்த இரண்டு சொத்துக்களும் எனது மாமனாருக்கு அவரது அப்பா எழுதிக் கொடுத்த சொத்துக்கள் என்றால் சரி தான். அந்த சொத்துகளில் எனது மாமனாரின் காலத்திலேயே 3 ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதி நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றால் இல்லை. புல எண்கள்.301/4 மற்றும் 305/3 ஆகிய புல எண்களில் தான் 6 ம் பிரதிவாதி நிறுவனம் இயங்கி வருகிறது என்றால் தற்போது இயங்கி வருகிறது. அந்த சொத்துக்கள் எனது மாமனார் பொன்மலைசாமிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி அல்ல. அது அவரது பூர்வீக சொத்து. அந்த இரண்டு சொத்துக்களும் எனது

மாமனாரின் அப்பா பழனி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி தான். அவர் உயிர் உடன் இருந்த போதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது இரண்டு மகன்கள் ஆன எனது மாமனார் பொன்மலைசாமிக்கும் அவரது சகோதரர் சுப்பையனுக்கும் உயில் எழுதி வைத்து விட்டார் என்றால் சரி தான். பழனிகவுண்டரின் அப்பா குமாரசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை அவரது மகன்களான சுப்பையனும், பொன் மலைசாமியும் வாய்மொழியாக பிரித்துக் கொண்டார்கள் என்றால் எனது திருமணத்திற்கு முன்னர் நடந்ததால் அவர்கள் எவ்வாறு பிரித்துக் கொண்டார்கள் என எனக்கு தெரியாது. குமாரசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை பொறுத்து தான் அ.வ.எண்.307/2006 வழக்கு நடந்தது என்றால் சரி தான். புல எண்கள்.301/4 மற்றும் 305/3 ஆகிய நிலங்கள் பொன்மலைசாமிக்கு உயில் மூலமாக வந்த சொத்துக்கள் என்பதால் அவர் உயிருடன் இருக்கும் வரைஅதில் எனது கணவர் எந்த பாகமும் கேட்கவில்லை என்றும் எந்த பாகப் பிரிவினையும் நடக்கவில்லை என்றால் எனது மாமனார் பெயரில் இருந்ததாலும் கூட்டுக் குடும்பமாக இருந்ததாலும் எனது கணவர் அப்படியே விட்டு விட்டார். அந்த சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும் எனது மாமனார் பொன்மலைசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி அல்ல. அந்த சொத்துக்கள் பொன்மலைசாமிக்கு 20.12.1993 ம் தேதிய உயில் ஆவண எண்.127/1993 ன் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி தான். அவ்வாறு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது மாமனார் பொன்மலைசாமி 3ம் பிரதிவாதிக்கு 2015 ம் வருடம் ஆவண எண்.146/2015 ஆக ஒரு உயில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அந்த உயில் ஏமாற்றி எழுதி வாங்கப்பட்டதாகும். பொன்மலை சாமி உயில் உடன் இருந்த போது நல்ல மன நிலையுடன் தான் அந்த உயிலை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி அல்ல. எனது மாமனார் மற்றும் மாமியார் மருத்துவ செலவிற்காக 3ம் பிரதிவாதி கோடி

கணக்கில் செலவு செய்துள்ளார் என்றால் சரி அல்ல. எனது மாமனார் மற்றும் மாமியார் கடைசி காலத்தில் 3 ம் பிரதிவாதியுடன் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் அவருக்கு திருமணம் ஆகாததால் அவருடன் இருந்தார்கள். எனது மாமியார் தான் மருத்துவமனையில் இருந்த போது முதலில் இறந்தார் என்றால் வீட்டில் வைத்து தான் முதலில் இறந்தார். எனது மாமியார் இறந்து எவ்வளவு நாள் கழித்து எனது மாமனார் இறந்தார் என்றால் 1 வருடம் 3 மாதங்கள் கழித்து இறந்தார். எனது மாமியார் இறந்த பின்னர் எனது மாமனாரும் 3 ம் பிரதிவாதியும் தனியாக தான் இருந்து வந்தார்கள் என்றால் சரி தான். அந்த கால கட்டத்தில் 3 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரி அல்ல எனது மாமியார் உயிர் உடன் இருந்த போதே திருமணம் ஆகி விட்டது. அவருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் அவரது திருமணத்திற்கு எங்களை அழைக்கவில்லை ஆனால் எனது மாமியார் உயிர் உடன் இருந்த போதே 3 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி விட்டது. எனது மாமியார் இருந்த காலத்திலேயே எங்களும் எனது மாமனார் மற்றும் மாமியாருக்கு பேச்சு வார்த்தையோ இல்லை என்றால் எனது மாமியார் இறப்பதற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு இருந்து தான் பேச்சு வார்த்தை இல்லை. எனது மாமியாரின் இறுதி சடங்குகளில் நானோ எனது கணவரோ கலந்து கொள்ளவில்லை என்றால் சரி அல்ல. எனது மாமியார் இறந்த வீட்டிற்கு நாங்கள் போக வில்லை என்றால் அவர்கள் வாடகை வீட்டில் இருந்ததாலும் எங்களை அங்கு வர வேண்டாம் என கூறியதாலும் நாங்கள் வீட்டிற்கு போகவில்லை. நானோ எனது கணவரோ மாமியாரின் வீட்டிற்கு போகவில்லை என்றும் அவர்களையும் பார்க்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. எனது மாமியார் மற்றும் மாமனார் இருவரும் என்ன நோய் வாய் பட்டு இருந்தார்கள் என்றும் என்ன மருத்துவ சிகிச்சை செலவு என்று நானோ எனது கணவரோ கேட்கவில்லை

என்றால் சரி அல்ல. நாங்கள் 3ம் நபர்களை வைத்து கேட்டும் அவர்கள் தகவல் சொல்லவில்லை. நானோ எனது கணவரோ அவர்களை போய் பார்க்கவில்லை என்றால் நான் ஒரு முறை மருத்துவமனைக்கு என்னை வெளியில் போக சொன்னார்கள். நானோ எனது கணவரோ அவர்களை போய் பார்க்கவில்லை என்றும் அவர்கள் என்ன நோய் வாய் பட்டார்கள் என்று தெரிந்து கொள்ளவும் இல்லை என்றால் சரி அல்ல. எனது மாமனார் நோய் வாய் பட்டு 28.03.2019 ல் இறந்து விட்டார் என்றால் சரி தான். அவருடைய இறப்பிற்கு பின்னர் அவர் எழுதி வைத்த உயில் ஆவணப் படி புல எண்கள்.301/4 மற்றும் 305/3 ஆகிய சொத்துக்களை 3ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரி அல்ல. அந்த சொத்துக்களில் தற்போது வரை 3ம் பிரதிவாதி தான் வீவிங் மில் கட்டி நடத்தி வருகிறார் என்றால் சரி அல்ல. அந்த சொத்தில் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் தற்போது 3ம் பிரதிவாதி உள்ளார். எங்களை உள்ளே விட மறுக்கிறார். அந்த சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரி தான். பணம் கொடுத்து மாற்றிக் கொண்டார். அவர் பணம் கொடுத்து மாற்ற வில்லை என்றும் அவர் பெயரில் உள்ள உயில் ஆவணத்தின் அடிப்படையில் மாற்றி கொண்டார் என்றால் சரி அல்ல. புல எண்கள்.301/4 மற்றும் 305/3 ஆகிய சொத்துக்கள் எனது மாமனார் பொன்மலை சாமிக்கு பாத்தியப்பட்டு அவர் 3ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் எழுதிக் கொடுத்து எனது மாமனாரின் இறப்பிற்கு பின்னர் அந்த உயில் நடைமுறைக்கு வந்து அதன் அடிப்படையில் அந்த சொத்துக்களை 3ம் பிரதிவாதி அனுபவதித்து வருகிறார் என்றும் அதில் வாதிகளுக்கோ எனது கணவருக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல. அ.வ.எண்.307/2006 வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கான வருவாய் ஆவணங்கள் தற்போது 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளன என்றால் சரி தான். வாதிகள் பிறப்பதற்கு முன்னரே அந்த சொத்துக்கள் நீதி மன்றத்தின்

மூலமாக பாகம் பிரிக்கப்பட்டு விட்டதால் அந்த சொத்துக்களில் வாதிகள் எந்த பாகமும் கோர இயலாது என்றால் சரி அல்ல. புல எண்.295/5 ல் எனது மாமனாருக்கு ஆயில் பாத்தியம் மட்டுமே வழங்கப்பட்டு இருந்தது என்றால் சரி தான். அவர் உயிருடன் இருந்தவரை அவர் தான் அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரி தான். அவ்வாறு அனுபவித்து வந்த போது 3ம் பிரதிவாதி நடத்தி வந்த 6ம் பிரதிவாதி நிறுவனத்தின் தேவைக்காக 20 ஆண்டுகளுக்கு குத்தகையாக ரூ.10 இலட்சம் பெற்றுக் கொண்டு 05.03.2015 அன்று குத்தகை ஆவணம் ஒன்றை எனது மாமனார் எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு எழுதிக் கொடுப்பதற்கு எனது மாமனாருக்கு எந்த உரிமையும் இல்லை. அந்த குத்தகை ஆவணத்தின் அடிப்படையில் 05.03.2015 முதல் இன்று வரை 3ம் பிரதிவாதி தான் புல எண்.295/5 ஐ அனுபவித்து வருகிறார் என்றால் நாங்கள் தான் அங்கு இருந்தோம். போன வருடம் தான் எங்களை சண்டைப் போட்டு வெளியேற்றி விட்டார்கள். நானும் எனது கணவரும் புல எண்.295/5 ல் எப்போது வரை கூட்டு சுவாதீனத்தில் இருந்தோம் என்றால் 2022 வரை இருந்தோம். எந்த வருடத்தில் இருந்து கூட்டு சுவாதீனத்தில் இருந்தோம் என்றால் எனது மாமனார் இறந்ததில் இருந்து கூட்டு சுவாதீனத்தில் இருந்தோம். எனது மாமனார் இறப்பதற்கு முன்னர் எங்கு இருந்தோம் 2013 ம் ஆண்டு வரை கூட்டுக் குடும்பமாகத் தான் இருந்தோம். இந்த வழக்கு தாக்கல் செய்த போது எனது கணவர் என்னை துரத்தி விட்டதாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரி தான். பிராது தாக்கல் செய்த தேதியில் இருந்து இன்று வரை நானும் எனது கணவரும் தனியாகத் தான் இருந்து வருகிறோம் என்றால் சரி தான். எனது மாமனார் இறந்த 28.03.2019 அன்று நான் எனது கணவருடன் இல்லாமல் தனியாகத் தான் எனது அப்பா வீட்டில் இருக்கிறேன் என்றால் சரி தான். இதே தாவா சொத்துகளை பொறுத்து பாகம் கோரி எனது கணவர் மேட்டுப்பாளையம் உரிமையியல் நீதி மன்றத்தில்

அ.வ.எண்.86/2020, 77/2021, 78/2019 ஆகிய வழக்குளை தாக்கல் செய்து உள்ளார் என்றால் அவருடைய உரிமைக்காக அவர் தாக்கல் செய்து இருப்பார். எனது கணவர் ஏற்கனவே அ.வ.எண்.307/2006 வழக்கு தாக்கல் செய்து சொத்துக்களை பாகம் பெற்ற பின்னர் அவருக்கு உரிமை இல்லாத சொத்துகளை பாகம் பெறுவதற்காக மேற்கண்ட 3 வழக்குகளையும் தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி அல்ல. தாவா சொத்துக்களை எப்படியாவது அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னை தூண்டி விட்டு எனது பிள்ளைகள் பேரில் எனது கணவர் வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரி அல்ல. நானும் எனது கணவரும் தற்போது வரை ஒன்றாகத் தான் வாழ்ந்து வருகிறோம் என்றும் என்றால் சரி அல்ல. எந்த காலத்திலும் வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஓம்/-. கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.